யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

- **01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிந்தெடுத்து, அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (✕) இடுவதன் மூலம் காட்டுக.**

1) "ஊடகக் கலாசாரமும் சமூகமும்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய அறிஞர், மேலைத்தேச கலாசாரம் உயர்வாக மதிக்கப்படுவதாகவும் கீழைத்தேச கலாசார பெறுமானங்கள் குறைத்து மதிப்பிடப்படுவதுடன், புறக்கணிக்கப்படுவதாகவும், மேலைத்தேச சிந்தனைகள் சமூகமயப்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.
இவர் உரை தொடர்புபட்டமைவது
(1) கலாசார சுற்றோட்டத்தின் சமமின்மை (2) கலாசார திணிப்பு
(3) கலாசார தேக்கம் (4) கலாசார விருத்தி
(5) கலாசார உறுதுணை

2) சிந்தனையின் விளைவாக அடுத்த படிநிலையில் அமைவது
(1) எண்ணங்கள் (2) நடத்தைகள் (3) சட்டங்கள்
(4) புரிந்துணர்வு (5) முரண்பாடு

3) சமூகம் ஒன்றினை அடையாளப்படுத்துவதற்கு உள்ளடக்க முடியாத கூற்று
(1) பொதுவான பண்பாட்டைக் கொண்டிருப்பர்
(2) ஒருவரை ஒருவர் அறிந்திருப்பர்
(3) தனியன்களாக (தனி அலகுகளாக) காணப்படுவர்.
(4) மக்கள் ஒற்றுமையுடனும் கூட்டுறவுடனும் இருப்பர்.
(5) திரளாக மக்கள் காணப்படுவர்

4) ஒரு நபர் சமூகத்திற்கு பொருத்தப்பாடடைவதற்கு உதவும் முறைசார் காரணிகளாக அமைவன
(1) குடும்பம், பாடசாலை
(2) பாடசாலை, சமவயதுக்குழு
(3) சமவயதுக்குழு, கழகங்கள்
(4) பாடசாலை, சமூகநிறுவனங்கள்
(5) சமூக நிறுவனம், சமவயதுக்குழு

5) முறைசாராக் குழுக்களினால் ஏற்படுத்தப்படும் எதிர்விளைவாக (Negative Impact) அமையக்கூடியது
(1) எப்போதும் விமர்சித்தல்
(2) தேவையான சந்தர்ப்பத்தில் மட்டும் விமர்சித்தல்
(3) தொடர்ச்சியாகப் பொறுப்புக்களை ஏற்க முன்வருதல்
(4) குறித்த நேரத்தில் வேலைகளை நிறைவேற்றல்
(5) உடனடியாக முடிவுகள் எடுக்கப்படுதல்

6) பாடசாலையில் மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு ஆசிரியர் மேற்கொள்ளும் செயற்றிட்டங்களுக்கு பயன்படக்கூடிய தொடர்பாடல் வடிவம், வகை முறையே

(1) வாய்மொழி மூலம், ஆளிடைத்தொடர்பாடல்

(2) எழுத்துமூலம், ஆளிடைத்தொடர்பாடல்

(3) வாய்மொழிமூலம், கூட்டுத்தொடர்பாடல்

(4) கட்புலமூலம், கூட்டுத்தொடர்பாடல்

(5) வாய்மொழிமூலம், வெகுசனத்தொடர்பாடல்

7) வகுப்பறையில் ஆசிரியர் - மாணவர் இடைத்தொடர்பைச் சீராகப் பேணுவதற்கு எடுக்கக்கூடிய பொருத்தமான செயற்பாடாவது

(1) கட்டுப்பாடுகள் எதுவுமின்றி மாணவர் விருப்பத்திற்கேற்ப செயற்பட இடமளித்தல்.

(2) ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியாக இடைத்தொடர்புக்கு வழிப்படுத்தல்

(3) சமவயதுக் குழுக்களின் கட்டமைப்பொன்று உருவாகும் வகையில் வகுப்பறைச் செயற்பாட்டை ஒழுங்கமைத்தல்

(4) ஆசிரியர் மாணவர்களுடன் சுமூகமாக உரையாடும் தன்மையை உருவாக்கல்

(5) வகுப்பறை மட்டத்தில் முறைசாராத் தொடர்பைப் பலப்படுத்தல்

8) - தொடர்பாடுபவர்கள் தொழில்சார் தகைமையுடையவர்

- பல வாயிற்காப்பாளர் பொறிமுறைக்கு உட்பட்டது.
- தொடர்ச்சியாகத் தகவல் வழங்கும் பணி

மேற்படி இயல்புகளுடன் தொடர்புபட்டமைந்த தொடர்பாடல்

(1) ஆளிடைத் தொடர்பாடல் (2) முறைசாரா தொடர்பாடல்

(3) மக்கள் தொடர்பாடல் (4) கூட்டுத் தொடர்பாடல்

(5) முறைசார் தொடர்பாடல்

9) இலத்திரனியல் ஊடகங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக அமைக்கப்பட்ட நிறுவனம்

(1) பொது அளிக்கைச் சபை

(2) பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு

(3) இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழு

(4) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

(5) இலங்கை பத்திரிகைச் சபை

10) “செய்திப் பத்திரிகைக்கான மொழிப்பயன்பாடு” தொடர்பிலான கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட சில கருத்துக்கள் பின்வருமாறு

A - சுருக்கமான, எளிமையான மொழிப்பயன்பாடு

B - நீண்ட வாக்கியப் பயன்பாடு

C - பொதுவான மொழிப்பயன்பாடு

D - புள்ளிவிபரங்களின் சுருக்கமான பயன்பாடு

E - குறுகிய வாக்கியப் பயன்பாடு

மேற்குறித்தவற்றில் செய்திப் பத்திரிகைக்கான மொழிப் பயன்பாட்டுடன் தொடர்புபட்டவை

(1) A மற்றும் E உம் (2) B மற்றும் D உம் (3) B மற்றும் C உம்

(4) B, C மற்றும் E உம் (5) C, D மற்றும் E உம்

11) நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பிலான தகவல்களை உள்ளடக்கியதாக வெளியிடப்படுவதும், நிறுவனங்களின் கடிதத் தலைப்புக்களில் அதிகாரபூர்வ முத்திரையுடன் ஊடகங்களுக்காக வெளியிடப்படுவது பின்வருமாறு அழைக்கப்படும்

(1) பீட் அறிக்கை (Beat Report) (2) ஊடக அறிக்கை (Press Release)
(3) கையேடுகள் (4) செய்தி அறிக்கை
(5) விபரண அறிக்கை

12) 'ஒரு பயனை, ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உரையாடல்' என வில்லியம் மெட்ஸ் குறிப்பிடுவது

(1) பேச்சு (2) விபரணம் (3) நேர்காணல்
(4) கதைகூறல் (5) பிரதியாக்கம்

13) A - இடப்பிரச்சினை (Space), காலப்பிரச்சினை (Time consumption) அற்றது.

B - முன்னய தகவல் தொகுப்பு (Archives) வசதி கொண்டது.

C - விரைவான தொடர்பு, ஒன்றிணைப்பு மிக்கது

D - இலத்திரனியல் செயன்முறைக்கு உட்பட்டது.

E - கலந்துரையாடல் வசதி அற்றது. (Intreractive)

மேற்படி கூற்றுக்களில் இணைய ஊடக இயல்புகளைப் பிரதிபலிப்பன

(1) A, B மற்றும் C உம் (2) A, C மற்றும் D உம் (3) A, B, C மற்றும் D உம்
(4) A, C, D மற்றும் E உம் (5) A, B, C மற்றும் E உம்

14) - இரகசியம் பேணுவது கடினம்
- பெருந்தொகையான பெறுநர் கூட்டம் காணப்படும்போது வினைத்திறன் மிக்கதாகப் பிரயோகிக்க முடியாது.
- நம்பகத்தன்மை இழிவளவானது
- பிற்காலத் தேவைக்குப் பயன்படுத்த இயலாது.

மேற்படி இயல்புகள் தொடர்புபட்டமையும் தொடர்பாடல் வடிவம்

(1) சொல்சார் தொடர்பாடல் வடிவம் (2) சொல்சாரா தொடர்பாடல் வடிவம்
(3) கட்புல தொடர்பாடல் வடிவம் (4) செவிப்புல தொடர்பாடல் வடிவம்
(5) எழுத்துமூல தொடர்பாடல் வடிவம்

15) தொடர்பாடுபர் - பெறுநர்க்கு இடையில் சிறந்த புரிந்துணர்வு, இடைவினைத் தொடர்பு ஏற்படுவதற்கு பயனுள்ளதாக அமையும் தொடர்பாடல் கூறு (Element)

(1) தகவல் (2) தொடர்பாடல் சூழல் (3) செய்தி உள்ளடக்கம்
(4) ஊடகம் (5) பின்னூட்டல்

16) நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர்கள் தமது பிரச்சினைகளை எடுத்துக்கூறித் தீர்வினைப் பெறுவதற்கும், கருத்துக்களை முன்வைப்பதற்கும், தமது உரிமைகளைப் பேணித் ஜனநாயகத் தன்மை மிக்க தொடர்பாடல் சூழலை உருவாக்குவதற்கு உதவுவது

(1) கீழ் இருந்து மேல்நோக்கிய தொடர்பாடல் (2) கிடைத்தொடர்பாடல்
(3) மேல் இருந்து கீழ் நோக்கிய தொடர்பாடல் (4) முறைசாரா தொடர்பாடல்
(5) முறைசார் தொடர்பாடல்

17) ''பகிரங்கப் பேச்சினைக் கேட்டுக்கொண்டு இருந்தவர்களில் சிலர் அமைதியாக இருந்து செவிமடுத்துக்கொண்டிருந்தனர். சிலர் கைதட்டினர். சிலர் தமக்குள் உரையாடிக்கொண்டிருந்தனர்''
மேற்படிச் சம்பவம் பின்வருமாறு அழைக்கப்படும்
(1) பின்னூட்டல் (2) குறிமுறையவிழ்தல் (3) நுகர்தல்
(4) உச்சஸ்தானம் (5) எதிர்வினை

18) பின்வருவனற்றுள் மக்கள் தொடர்பு அதிகாரியின் பொறுப்பாக அமையாதது
(1) பொதுமக்கள் நிறுவனத்தின் மீது கொண்டுள்ள அபிப்பிராயத்தை நிர்வாகத்திற்குத் தெரிவித்தலும் கலந்துரையாடலும்
(2) பொதுமக்கள் நிறுவனத்தின் மீது கொண்டுள்ள அபிப்பிராயத்தை தான் நேரடியாகக் கையாளுதலும், நிர்வாகத்துடன் கலந்துரையாடுவதைத் தவிர்த்தலும்
(3) பொதுமக்களுடன் உறவைக் கட்டியெழுப்புதலும், செயற்படுத்தலும்.
(4) விளம்பர நிறுவனங்கள் மற்றும் விளம்பரத் துறையுடன் நெருக்கமான தொடர்பைப் பேணுதலும், சேர்ந்து செயலாற்றுதலும்.
(5) வெகுசன ஊடகங்களுக்கான அறிக்கையைத் தயாரித்தலும், வழங்குதலும், தொடர்பைப் பேணுதலும்.

19) தகலைச் சமிக்ஞையாகவோ குறியீடாகவோ மாற்றுகின்ற செயன்முறை மற்றும் சமிக்ஞை தகவலாக மாற்றப்படுகின்ற செயன்முறை முறையே பின்வருமாறு அழைக்கப்படும்
(1) குறிமுறையவிழ்ப்பு, எதிர்விளைவு
(2) அனுப்புதல், குறிமுறையாக்கம்
(3) குறிமுறையாக்கம், குறிமுறையவிழ்ப்பு
(4) குறிமுறையவிழ்ப்பு, குறிமுறையாக்கம்
(5) குறிமுறையாக்கம், உச்சஸ்சாதனம்

20) விளம்பரம் என்பது
(1) தகவலை வழங்குதல், நியாயப்படுத்தல், நன்மதிப்பை உயர்த்துதல்
(2) நியாயப்படுத்தல், தூண்டலை ஏற்படுத்தல், பிரபல்யப்படுத்தல்
(3) நன்மதிப்பை உருவாக்கல், பிரச்சாரம் (Propayanda), பிரபல்யம் (Publicity)
(4) விற்பனையைத் தூண்டுதல், நியாயப்படுத்தல், பிரச்சாரம்
(5) தகவலை வழங்குதல், சந்தைப்படுத்தல், விற்பனையைத் தூண்டுதல்

21) ஊடக ஆய்வு தொடர்பிலான மாநாடு ஒன்றில் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.
சிவம் : ஊடகங்கள் பெறுநர்களின் மீது கவனத்தைப் பெறுவதற்கும், வீச்சை அதிகரிக்கவும், வன்முறை விடயங்களுக்கு முதன்மையளிக்கின்றன.
காதர் : ஒப்பீட்டுரீதியில் பத்திரிகையின் முதற்பக்கம் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வன்முறை விடயங்கள் இழிவளவாகக் காணப்படுகின்றன.
நயன் : வெகுசன ஊடகங்கள் பெறுநரை அச்சத்திற்கும், பயத்திற்கும் உட்படுத்துவதன் மூலம் பிணைப்பை அதிகரித்துக்கொள்கின்றன.
குமாரி : ஊடாக வன்முறை ஊடக சந்தைப்படுத்தலுக்கான ஓர் உபாயம்.
கருணா : ஊடக வன்முறைகள் வீடு மற்றும் சமூக சூழலில் மீள் உருவாக்க செயன்முறைக்கு உட்படுத்தப்படுவதில்லை.
மேற்குறித்த நபர்களின் கருத்துக்களின் ஊடக வன்முறையுடன் தொடர்புபட்டமைந்தவை
(1) சிவன், நயன், குமாரி ஆகியோரின் கூற்றுக்கள்
(2) காதர், நயன், கருணா ஆகியோரின் கூற்றுக்கள்
(3) சிவம், நயன், கருணா ஆகியோரின் கூற்றுக்கள்
(4) காதர், நயன், குமாரி மற்றும் கருணா ஆகியோரின் கூற்றுக்கள்
(5) சிவம், காதர், நயன், குமாரி ஆகியோரின் கூற்றுக்கள்

22) சமூகத் தொடர்பாடல் விருத்திக்கான செயற்றிட்டத்தின் பிரதான இலக்கு

(1) ஆய்வுக்கான தேடலை ஊக்குவித்தல்

(2) திறன் விருத்தியை ஏற்படுத்தல்

(3) ஆக்கத்திறனை மேம்படுத்தல்

(4) இரசிகர்களுக்குத் திருப்தியளிக்கும் விடயங்களை முன்வைத்தல்

(5) நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தல்

23) புதிய தாராண்மை வாதத்தின் அடிப்படை

(1) புகழ்கலாசாரம்

(2) ஊடகக் கலாசாரம்

(3) உலகமயமாக்கல்

(4) அபிவிருத்தி கலாசாரம்

(5) ஊடக விளம்பரக் கலாசாரம்

24) மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கான

- வெளிக்குழு உதவி மூலம் செயற்படுத்தப்படுவது
- நடைமுறை சாத்தியப்பாட்டைக் கணிப்பிடுதல்
- வரவு செலவுத் திட்டத்திற்குப் பொருத்தமானதா என்று கணிப்பிடல்
- திட்டத்திற்கான மாற்றங்களைச் சிபாரிசு செய்தல்

போன்ற நடைமுறைகள் பின்வரும் எந்த மக்கள் தொடர்பு நிகழ்ச்சித்திட்ட கட்டத்துடன் தொடர்புடையதாக அமைகின்றன

(1) முன் மதிப்பீட்டுக் கட்டம்

(2) நிலைமைப் பகுப்பாய்வுக் கட்டம்

(3) இலக்குகளை வரையறுத்தல் கட்டம்

(4) திட்டமிடல் கட்டம்

(5) பயனாளிகளை இனங்காணல் கட்டம்

25) A - அதிக உணர்ச்சியின் விளைவு

B - அதீத ஆர்வம் கொள்ளல்

C - தெளிவான காரணமின்மையின் விளைவு

D - தன்னைப் பற்றி ஏற்படும் கவலை

மேற்படி இயல்புகளுடன் தொடர்புபட்டமைந்த எளிமையான உள அழுத்தங்கள் முறையே

(1) சுய அனுதாபம், சஞ்சலம், பதட்டம், வைராக்கியம்

(2) பதட்டம், சஞ்சலம், வைராக்கியம், சுய அனுதாபம்

(3) சஞ்சலம், பதட்டம், வைராக்கியம், சுய அனுதாபம்

(4) பதட்டம், வைராக்கியம், சஞ்சலம், சுய அனுதாபம்

(5) வைராக்கியம், சஞ்சலம், பதட்டம், சுய அனுதாபம்

26) சமூகமயமாக்கலின் விளைவாக அமையாதது

(1) சமூகத்திற்கு எதிர்நடத்தைகளை வெளிப்படுத்தல்

(2) சமூகத்தை அறிந்துகொள்ளல்

(3) சமூகத்திற்கு இசைந்துகொள்ளல்

(4) சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்படுதல்

(5) சமூகத்தை விளங்குதலும், சமூக அங்கீகாரத்தைப் பெறுதலும்

27) வகுப்பறைச் செயற்பாடு ஒன்றில் வாய்மொழி மூலம் அல்லாத தொடர்பாடல் நிலைமைகளை வெளிப்படுத்துவதாக பின்வரும் சந்தர்ப்பங்கள் அமைகின்றன.

A - குழு வேலையின் போது அருகில் செல்லல்

B - முறைத்துப் பார்த்தல்

C - கைதட்டுதல்

D - கண்தொடர்பு

E - புன்சிரிப்புடன் தலையசைத்தல்

மேற்படி சந்தர்ப்பங்களுக்கான ஆசிரியர் செயற்பாட்டின் நோக்கங்களை முறையே காட்டுவன

(1) இடைத்தொடர்பை அதிகரித்தல், அதிகார வெளிப்பாடு, மதிப்பளித்தல், நடத்தையைக் கவனித்தல், அனுமதியளித்தல்

(2) மதிப்பளித்தல், அதிகார வெளிப்பாடு, அனுமதியளித்தல், நடத்தையைக் கவனித்தல், இடைத்தொடர்பை அதிகரித்தல்,

(3) அனுமதியளித்தல், அதிகார வெளிப்பாடு, இடைத்தொடர்பை அதிகரித்தல், மதிப்பளித்தல், நடத்தையைக் கவனித்தல்

(4) நடத்தையைக் கவனித்தல், அனுமதியளித்தல், இடைத்தொடர்பை அதிகரித்தல், மதிப்பளித்தல், அதிகார வெளிப்பாடு

(5) அதிகார வெளிப்பாடு, நடத்தையைக் கவனித்தல், அனுமதியளித்தல், இடைத்தொடர்பை அதிகரித்தல், மதிப்பளித்தல்

28) பின்வருவனவற்றுள் தகவல் அறியும் உரிமையுடன் தொடர்பற்றது

(1) அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல், வெளிப்படைத் தன்மையை இழிவளவாக்குகின்றது.

(2) அரச நிறுவனம் ஒன்றிடமுள்ள குறிப்பிட்ட தகவலை பிரஜை ஒருவருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கும் உரிமை

(3) பிரஜை ஒருவர் நிறுவனம் ஒன்றிடம் தகவலை வெளிப்படுத்துமாறு கோரும் உரிமை

(4) அரசாங்கத்திடம் உள்ள தகவல்களை அறிவதற்கு பொதுமக்களுக்கு சட்ட அனுமதி வழங்குகின்றது.

(5) "பொதுமக்களின் அணுகும் வாய்ப்பு" கோட்பாட்டின் விளைவால் உருவானது.

29) அபிவிருத்திக்கான தொடர்பாடலுக்கு சமூக வானொலி முக்கிய பங்கு வகிக்கின்றது.

A - பேச்சுமொழி பயன்படுத்தல்.

B - பிரதேச மொழிக்கு முதன்மையளித்தல்

C - நேயர்களைப் பேசத் தூண்டுதல் மற்றும் பின்னூட்டலை அதிகரித்தல்

D - பொதுமொழியைப் பயன்படுத்தல்

E - கிளைமொழியைப் பயன்படுத்தல்

மேற்படி கூற்றுக்களில் சமூக வானொலிக்கான மொழிப் பயன்பாட்டின் உள்ளடக்கத்தைப் பிரதிபலிப்பன

(1) A, C மற்றும் D

(2) A, D மற்றும் E

(3) A, B மற்றும் D

(4) A, B, C மற்றும் E

(5) B, C, D மற்றும் E

30) இலங்கையில் சமூக வானொலி சேவையை ஏற்படுத்துவதற்கு ஆரம்பநிலையில் உதவி வழங்கிய இரண்டு சர்வதேச அமைப்புக்கள்

(1) ஐக்கியநாடுகள் சபை, யுனெஸ்கோ

(2) யுனெஸ்கோ, ஐரோப்பிய யூனியன்

(3) டெனிடா (DANIDA), யுனெஸ்கோ

(4) யுனெஸ்கோ, உலகவங்கி

(5) ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி

31) பிரதேசங்களுக்குள்ளும் சமூக ரீதியிலான வேறுபாடுகளைக் கொண்டு விளங்கும் பேச்சுவழக்குகளை மொழியியலாளர் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

(1) கலப்புமொழி (2) பிரதானமொழி (3) எழுத்துமொழி

(4) பேச்சுவழக்குமொழி (5) சமூகக் கிளைமொழி

32) - தனிநபர் உரிமையைப் பாதுகாத்தல்

- சுயாட்சி பற்றி மக்களுக்கு அறிவித்தலும், அறிவூட்டலும்

- சமுதாய நடப்புப் பற்றிய தகவல் மற்றும் விவாதங்களுக்கு முதன்மையளித்தல்

- பொருளாதார சமநிலையைக் கட்டியெழுப்ப உதவுதல்

மேற்படி கூற்றுக்களைப் பிரதிபலிக்கின்ற பத்திரிகைக்குரிய பொறுப்புக்களை உள்ளடக்கிய தொடர்பாடல் கோட்பாடு

(1) சோவியற் பொதுவுடைமைக் கோட்பாடு

(2) சமுதாய பொறுப்புடமைக் கோட்பாடு

(3) ஆதிக்கக் கோட்பாடு

(4) சுதந்திரக் கோட்பாடு

(5) அபிவிருத்திக்கான தொடர்பாடல் கோட்பாடு

33) தொடர்பு சாதனங்கள் தொடர்பிலான ஆறு வகையான தொடர்பாடல் கோட்பாடுகளை முன்வைத்தவர்

(1) பர்லோ (2) வில்பர் ஷ்ராம்

(3) ஷெனோன் மற்றும் வீபர் (4) லாஸ்பெல்

(5) டேனிஸ் மாக்குவால் (Denis MC Quail)

34) உணர்வுகள், பசி, மனநிலை, இயற்கை சுபாவம், உள்ளுணர்ச்சியின் உத்வேகம் ஆகியவற்றின் ஒட்டுமொத்த வெளிப்பாடு பின்வருமாறு அழைக்கப்படும்

(1) தூண்டல் (2) எதிர்வினை (3) மீளவலியுறுத்தல்

(4) பின்னூட்டல் (5) பதிலளித்தல்

35) ‘ஊடகங்களும் மொழியும்’ எனும் கருப்பொருளில் இடம்பெற்ற ஊடகவியலாளருக்கான செயலமர்வில் ஊடகங்களுக்கான மொழிப்பயன்பாடு தொடர்பில் கருத்தாடல் இடம்பெற்றது.

குமார் : ஊடக அறிக்கையில் நீண்ட வாக்கியங்களை தவிர்க்க வேண்டும்

ரவி : ஒரு வாக்கியத்தில் இரண்டு எதிர் மறைக் கருத்தை உள்ளடக்கக் கூடாது.

சரா : உவமை, பழமொழி, உவமேயங்களை பயன்படுத்தல் செய்தி அறிக்கையை வலுப்படுத்தும்.

சாந்தி : வாக்கியங்களை செய்வினையில் ஆரம்பித்து செயற்பாட்டு வினையில் முடிக்கக் கூடாது.

காந்தன் : ஒருவரின் கூற்றை வழங்கும் போது மேற்கோள் குறியை உபயோகித்தல் அவசியமில்லை.

மேற்படி கலந்துரையாடல் கூற்றுக்களில் ஊடகபயன்பாட்டுக்கு பொருத்தமானவையாக அமையக் கூடியன

(1) குமார், சாரா மற்றும் சாந்தியின் கூற்றுக்கள்

(2) குமார், ரவி மற்றும் சாந்தியின் கூற்றுக்கள்

(3) ரவி, சாந்தி மற்றும் காந்தனின் கூற்றுக்கள்

(4) ரவி, சாரா மற்றும் சாந்தியின் கூற்றுக்கள்

(5) சாரா, சாந்தி மற்றும் காந்தனின் கூற்றுக்கள்

The National e-learning Portal for The General Education

36) நம்பிக்கையை ஏற்படுத்திச் செயற்படத் தூண்டும் மற்றும் சொல்லப்படும் தகவல் சிலவேளை மிகைப்படுத்தப்பட்டு இருப்பது

(1) பிரச்சார தகவல் பரிமாற்ற செயன்முறையில்

(2) பொதுசன அபிப்பிராய தகவல் பரிமாற்ற செயன்முறையில்

(3) பொதுசன தொடர்புக்கான தகவல் பரிமாற்ற செயன்முறையில்

(4) விளம்பரத்துக்கான தகவல் பரிமாற்ற செயன்முறையில்

(5) பிரபல்யத்துக்கான (Publicity) தகவல் பரிமாற்ற செயன்முறையில்

37) அபிவிருத்தி தொடர்பாடல் சார் சவால்கள் தொடர்பில் பின்வருவனவற்றுள் அரசியல் மற்றும் கலாசார அடிப்படைகளாக உள்ளடக்க முடியாதது

(1) தொடர்பாடல் ஊடகங்கள் அரசியல்மயப்படுத்தப்படல்

(2) கிழக்கு மற்றும் மேற்குக்கு இடையிலான அபிவிருத்தி தொடர்பிலான துருவ நிலைகள்

(3) ஊடகங்கள் வர்த்தக மயப்படுத்தப்படல்

(4) முன்னேற்றத்துக்கான அரசியல் கலாசார உருவாக்கமின்மை

(5) நிலையான தேசிய கொள்கை இன்மையும், நவீன கலாசார அபிவிருத்தி இன்மையும்

38) ‘ஊடக விமர்சகர் ஒருவர் குறித்த ஊடகப் படைப்பின் தயாரிப்பின் நுட்பம், தாக்கம், முறைமை, அணுகுமுறைகள், உள்ளடக்கம் தொடர்பில் மதிப்பீட்டை முன்வைத்தார்’’

மேற்படி செயன்முறை ஊடக விமர்சன பிரவேசத்தில் பின்வருமாறு அழைக்கப்படும்

(1) அழகியல் சார்ந்த பிரசேம்

(2) ஒப்பீட்டு மற்றும் பகுப்பாய்வுப் பிரவேசம்

(3) மொழிசார்ந்த பிரவேசம்

(4) வரலாற்றுப் பிரவேசம்

(5) அரசியல் சார்ந்த பிரவேசம்

39) பின்வருவனவற்றில் புகழ் கலாசார (Popular Culture) உருவாக்கத்திற்கு ஊக்கமளிக்கக் கூடிய காரணியாக அமையாதது

(1) வியாபார அனுசரணையாளரின் முனைப்பான தன்மை

(2) சமூகத்தின் பிரசித்தி பெற்ற பிரதி விம்பங்களை நிறுவனங்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தல்.

(5) ஊடகங்கள் சுதேச பண்பாட்டு கலாசார விடயங்களை மீள் உருவாக்கம் செய்தல்

(4) வெகுசன ஊடக கலாசார பரவலாக்கம்

(5) உலகமயமாக்கல், மேலைமயமாக்கலின் தீவிரத்தன்மை

40) சுய எண்ணக்கரு உருவாக்கத்தில் பல்வேறுபட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனடிப்படையில் ஒருவரிடம் முதன்முதலில் உருவாகின்ற அனுபவத்தின் அடிப்படையில் உருவாகின்ற சுய எண்ணக்கரு தொடர்புபட்டமையும் காரணி

(1) கற்றல் அனுபவக் காரணி

(2) மாறா எண்ணக்கருக் காரணி

(3) வார்ப்பு எண்ணக்கருக் காரணி

(4) முன் அனுபவம் சார் காரணி

(5) போலி எண்ணக்கருக் காரணி

41) மாஸ்லோவின் தேவைக்கூம்பின் படிநிலைக்கு ஏற்ப உடலியல், பாதுகாப்பு, அன்பு, உறவு, கணிப்பு, சுய உணர்வு ஆகிய தேவைகளுக்கு எடுத்துக்காட்டுகளாக முறையே அமைவன

(1) கௌரவப்படுத்தல், நித்திரை, ஆக்கத்திறன் வெளிப்பாடு, நட்பு, தொழில்

(2) பசி, சட்டம், பெற்றோர், வெகுமதியளித்தல், சாதனை புரிதல்

(3) ஆராய்வுத்திறன், தாகம், வீடு, பாராட்டு, உறவினர்

(4) பாராட்டு, வீடு, நித்திரை, ஆக்கவெளிப்பாடு, சமூக அங்கீகாரம்

(5) சட்டம், சமூக அங்கீகாரம், புத்தாக்கம், பசி, வெகுமதியளித்தல்

42) செவிமடுத்தல் திறன் விருத்திக்கான அணுகுமுறையாக அமையாதது

(1) உற்றுநோக்குதலை விருத்தியாக்குதல்

(2) தடைகளை இழிவளவாக்குதல்

(3) மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தல்

(4) பற்றையும் விருப்பத்தையும் உருவாக்குதல்

(5) கவனக் கலைப்பான்களை உருவாக்குதல்

43) பின்வருவனவற்றுள் தவறான கூற்றைத் தெரிவுசெய்க

(1) மாற்று ஊடகம் ஊடாக சமூகப் பெறுமானங்கள் சமூக இசைவுக்கு உட்படுத்தப்படுகின்றன.

(2) மாற்று ஊடகங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட வகையில் முன்னெடுக்கப்படுவதில்லை.

(3) மாற்று ஊடகங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட வகையில் செயற்படுகின்றன.

(4) மாற்று ஊடகங்கள் பிரதான ஊடக நிறுவனத்திற்கு எதிரான ஊடகப்பாணி பின்பற்றப்படுதல்.

(5) மாற்று ஊடகங்களின் பயனாளிகள் சிறு குழுக்களுடன் தொடர்புபட்டதாக அமையும்

44) அபிவிருத்தித் தொடர்பாடலுக்கான செயற்றிட்ட நடவடிக்கைகளின் போது 'கான்ட் அட்டவணை' படிவம் பயன்படுத்தப்படுவது பின்வரும் தகவலைப் பெறுவதற்காகவாகும்.

(1) திட்டத்துக்கான வரவு செலவை அறிவதற்கு

(2) பொறுப்பு மற்றும் நேர அட்டவணையை அறிவதற்கு

(3) நோக்கங்களை அறிவதற்கு

(4) உபாய வழிமுறைகளை அறிவதற்கு

(5) மதிப்பீட்டு செயற்பாடுகளை அறிவதற்கு

45) எந்தவொரு ஊடகத்தின் மூலமும் கிடைக்கும் செய்திகளை ஆக்கபூர்வமாகக் கிரகித்துக் கொள்ளல் பின்வருமாறு குறிப்பிடப்படும்

(1) ஆக்கபூர்வமான வாசிப்பு (2) ஆக்கபூர்வமான பேச்சு

(3) ஆக்கபூர்வமான கட்டுரை (4) ஆக்கபூர்வமான சிந்தனை

(5) ஆக்கபூர்வமான கற்பனை

46) பின்வருவனவற்றுள் குடிசன ஊடகவியல் எண்ணக்கருவை பிரதிபலிக்காதது

(1) தொடரறா ஊடகவியலின் (Online media) இறுதி அறிமுகம் குடிசன ஊடகவியல் போக்காகும்.

(2) தொடரறா ஊடகவியலில் ஒருபகுதி குடிசனங்கள் பங்குபற்றலுக்கான வாய்ப்புக்களை வழங்குகின்றன.

(3) பொதுமக்கள் வழங்கும் செய்திகள் வாயிற்காப்போரின் செயன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றன.

(4) பொதுமக்கள் வழங்கும் செய்தி, படங்களை அறிக்கையிட்டு வெளியிடுவதைக் குறிக்கும்

(5) பொதுமக்கள் ஊடக செயற்பாட்டின் பங்காளிகளாக மாற்றம் பெற்றுள்ளனர்.

47) வெற்றிகரமான தலைமைத்துவத்திற்கான தொடர்பாடல் சார் திறனாகக் கொள்ள முடியாதது

(1) செவிமடுத்தல் திறன் (2) ஒத்துணர்வுத்திறன் (3) தன்முனைப்பு சிந்தனைத்திறன்

(4) இசைவுபெறும் திறன் (5) சமூகத்திறன்

48) எண்ணக்கருசார் திறன், ஆளிடைசார் திறன்களுக்கு எடுத்துக்காட்டுக்களாக முறையே அமைவன

(1) தர்க்க சிந்தனை, பிறருடன் நட்புறவை உருவாக்கல்

(2) பகுப்பாய்வுத்திறன், பிரச்சினைக்கான தீர்வு

(3) பிரச்சினைக்கான தீர்வு, தர்க்க சிந்தனை

(4) பிறரது உணர்வுகளைப் புரிதல், பரிவுணர்வு

(5) தர்க்க சிந்தனை, பிரச்சினைக்கான தீர்வு

49)

| | | |
|---|---|---|
| | Win<br>lost<br>I | Win<br>Win<br>II |
| A நபர் | lost<br>lost<br>III | Win<br>lost<br>IV |

B நபர்

இதன்படி கட்டம் இரண்டில் A நபரும் B நபரும் சந்திக்கும் போது உருவாகின்ற நிலைமையில் அவதானிக்கப்படக்கூடிய பண்புகளாக அமைவன

(1) கேட்டல், கண்ணியம், பரிணர்வு


(2) பரிணர்வு, செவிமடுத்தல், கேட்டல்

(3) செவிமடுத்தல், ஒத்துணர்வு, தன்முனைப்பு

(4) தன்முனைப்பு, கேட்டல், ஒத்துழைப்பு

(5) ஒத்துழைப்பு வழங்குதல், விட்டுக்கொடுத்தல், பரஸ்பர விளக்கம்

50)




ஞாபகச் செயன்முறை தொடர்பாக மேற்படிவரிப்படத்தில் எதிர்கால தேவைகளின் நிமித்தம் களஞ்சியப்படுத்தப்படுவது

(1) படி I இல் (2) படி II இல்

(3) படி III இல் (4) படி IV இல்

(5) படி V இல்